# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : S.T.C.1150/2016 | Date | : 10.03.2023 |
| Deposition of Witness for | : எ.சா.1 | Taluk | : முசிறி |
| Name | : சின்னராஜா | Calling | : Axis Bank Manager |
| Father/Husband Name | : வீரப்பன் | Religion | : இந்து |
| Village | : வாளசிராமணி | Age | : 30 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.03.2023.

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் ஆக்ஸிஸ் வங்கியில் சர்வீஸ் அலுவலராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கும் மற்றும் வங்கி கணக்கு எண்.170010100143912 என்ற கணக்கின் 01.01.2014 முதல் மேற்படி கணக்கு முடிக்கப்பட்டது வரைக்குமான வங்கி கணக்கு பட்டியல் மற்றும் 07.03.2014, 24.03.2014 தேதிகளில் மேற்படி கணக்கின் வாடிக்கையாளர் வங்கிக்கு கொடுத்த கடிதங்களை ஆஜர்படுத்தும்படியும் வங்கிக்கு அழைப்பாணை வந்ததின் பேரில் நான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி வங்கி கணக்கின் 01.01.2014 முதல் மேற்படி கணக்கு முடிக்கப்பட்டது வரைக்குமான வங்கி கணக்கு பட்டியலை ஆஜர் செய்கிறேன் (**வங்கி கணக்கு பட்டியல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மற்ற ஆவணங்கள் இரண்டும் மும்பை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளோம். மேலும் 8 வருடங்கள் ஆகிவிட்டதால் மும்பை தலைமை அலுவலகத்தில் மேற்படி ஆவணங்கள் வைக்கப்பட்டிருக்கலாம். தற்போது உடனடியாக மேற்படி ஆவணங்களை கண்டுபிடித்து ஆஜர் செய்ய இயலாது.

2) மேற்படி வங்கி கணக்கானது ராஜேஷ் என்பவரின் வங்கி கணக்காகும். தற்போது என்னிடம் காட்டப்படும் கடிதமானது எங்கள் வங்கி ராஜேசுக்கு கொடுத்த கடிதம்தான் (**07.02.2017-ம் தேதியிட்ட கடிதத்தின் கணினி நகல் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வங்கி கணக்கு பட்டியல் எங்கள் வங்கியால் வழங்கியதுதான்

**(07.02.2017-ம் தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3) மேற்படி 07.02.2017-ம் தேதியில் மேற்படி ராஜேஷ் எங்கள் வங்கிக்கு கொடுத்த கடிதம் தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது. 24.03.2014-ம் தேதியில் மேற்படி ராஜேஷ் எங்கள் வங்கிக்கு கொடுத்த கடிதம் தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

Stop Payment கடிதம் என்ன காரணத்திற்காக கொடுக்கப்பட்டது என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது என்றால் மேற்படி கடிதத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். மேற்படி வங்கி கணக்கானது எப்போது முடிக்கப்பட்டது என்றால் 27.10.2018-ம் தேதி. ஒரு நபரின் ATM கார்டை மற்றொரு நபர் பயன்படுத்தும்போது உரிய நபருக்கு OTP எண் செல்லும் என்றும் மேற்படி OTP எண் மற்றும் ரகசிய எண்களை அவர் கூறாமல் மேற்படி கணக்கிலிருந்து பணம் எடுக்கமுடியாது என்றால் சரிதான்.

S R BABU Digitally signed by S R BABU Date: 2023.03.10 16:52:10 +0530

Sd /- Chinnaraja

Judicial Magistrate No.1,
Sankari.